**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC.970/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: உக்கரை | |
| Name | : கட்டுவாங்குதேவர் | | |
| | | Taluk | : திருவிடைமருதூர் |
| Father's/Husband's Name | : ரேக்குதுரை | Age | : 32 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 30.10.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி வழங்கிய 11.01.2022 தேதியிட்ட எதிரி எனக்கு எழுதிக் கொடுத்த Promisory Note அசல் பு.சா.ஆ.1 ஆகவும், 20.09.2023 தேதியிட்ட இந்தியன் வங்கி, தத்துவாஞ்சேரி கிளையின் காசோலை அசல் பு.சா.ஆ.2 ஆகவும், 21.09.2023 தேதியிட்ட சிட்டி யூனிவன் வங்கி, குறிச்சி கிளை அளித்த மெமோ அசல் பு.சா.ஆ.3 ஆகவும், 29.09.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.4 ஆகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 30.09.2023 ம் தேதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே என்னிடம் கடன் பெற்று தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்து எனக்கு காசோலை

அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**